சந்தர்ப்பங்களுக்கு அவர்களை ஈடுபடுத்த நேர்நதமை வளங்கள் மற்றும் தொழில்நுட்ப பதவியணியினர் வரையறுக்கப்பட்டதாக ஆகிய காரணங்கள் தாக்கமளித்திருந்தது.

(ஆ) ஆய்வு கற்கைகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள்

(i) 2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை நீர் மீதான நிலைமை மற்றும் அவற்றில் பொது மக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைப் பரிசோதனை செய்வதற்காக ரூபா 133,550,000 இற்கான மதிப்பீட்டுக் கிரயத்திற்கு 08 ஆய்வுக் கற்கைகள் ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 67,159,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த கற்கை செயற்திட்டங்களில் 04 இனை 2017 திசெம்பர் 31 திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அந்த 04 ஆய்வுக் கற்கைகளை எதிர்பார்த்த விதமாக பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் ஆய்வுக் கற்கைகளின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆய்வுக் கற்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக முழு நேர அடிப்படையில் ஆய்வு உத்தியோகத்தரொருவர் நியமனம் செய்யப்பட வேண்டுமெனினும் சபையினால் அனைத்து ஆய்வுக் கற்கைகளுக்குமாக ஆய்வு உத்தியோகத்தராக சபையின் பொது முகாமையாளர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக ஆய்வு கற்கைகளில் பங்குபற்ற நேரிட்டுள்ளமையால் திட்டமிட்டுள்ள காலப்பகுதியில் ஆய்வுக் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(iii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆய்வுக் கற்கைகளுக்கான மதிப்பீட்டுத் தொகையில் அடைந்திருந்த நிதி முன்னேற்றம் 15 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களின் தாமதக் காலம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையாக இருந்தது. மேலும் ஆய்வு கற்கைகளை நீடிக்கும் போது அதற்காக காரணம் மற்றும் மதிப்பீடுகள் என்பன காட்டப்பட்டிருக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

8

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2017 யூன் 29 ஆந் திகதி மதியுரைக் குழு கூடியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 08 ஆய்வுகளின் அறிக்கை மதியுரை கூட்டத்தின் குழுவின் ஆலோசனைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேறு அரச நிறுவனங்களுக்குரிய 03 வாகனங்கள் 1981, 2009 மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அவ்வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 31 இருப்பு உருப்படிகளில் மிகையும் 134 உருப்படிகளில் பற்றாக்குறையும் இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

தேவைப்பாட்டினை இனங்காணாமல் இயந்திர உபகரணங்களுக்கான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 171,516,000 ஆன இருப்புக்களில் ரூபா 76,474,390 மெதுவாக அசையும் இருப்புக்களும் காலாவதியான இருப்புக்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

4.4 முறையாக கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

சபையின் தலைமை அலுவலகம் இரத்மலான மற்றும் வவுனியா வேலைத் தளங்கள் மற்றும் அநுராதபுர சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் சபைக்கு கையேற்கப்படாமல் மீளாய்வாண்டின் தொடக்கம் வரையிலும் அக்காணிகளில் ரூபா 6,258,000 வெளியிடப்பட்டு புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டும் காணப்படும் கட்டிடங்களில் மாற்றங்களும் சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் வளங்கள்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவுக்கு முரணாக சபையின் கடமையை நிறைவேற்றுவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த சாரதியொருவர் சபையின் செயற்பாடுகளுக்கு புறம்பாக வரிசை அமைச்சின் செயற்பாடுகளுக்காக 2017 சனவரி 11 ஆந் திகதி முதல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 145,392 தொகை சம்பளம் மற்றும் படியாக சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

5. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 "நிகழ்ச்சி நிரல்" பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமொன்றும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக நீர் வளங்கள் சபையினால் தமது விடயப்பரப்பிற்கு கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

(அ) மேற்குறித்ததன் பிரகாரம் 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக நீர் வளங்கள் சபை அறிந்திருந்த போதிலும் அது தொடர்பான இலக்குகள், அடிப்படை தரவுகள், இலக்குகள் அடையப்பட வேண்டிய மைல்கல் உட்பட செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பாக நீர் வளங்கள் சபையின் செயற்பாடு தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினர்களுக்காக சுற்றாடல் அமைச்சு, தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற தரப்புகளை இனங்கண்டிருந்த போதிலும் நிறுவனத்திற்குரிய இலக்கை வடிவமைக்கும் போது பங்குபற்றுனர்களின் நுழைவு நிரூபணமாவில்லையென மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) ஏதேனும் செயற்பாடொன்றின் சரியான செயலாற்றலை மதிப்பீடுவதற்காக சரியான தரவுகள் அடிப்படையொன்று காணப்படுதல், அத்தியாவசியமாக இருந்த

போதிலும், சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதை மதிப்பீடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்காக நிதி ஏற்பாடு போதியளவு காணப்படாமை, பௌதீக வசதிகள் போதியளவில் இல்லாமை மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள், காணப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக உள்ளதென மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி அடையும் போது குறித்த செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான தேவையான வருடாந்த அடைவுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தயார்ப்படுத்தும் போது ஏனைய நிறுவனங்களுடன் உரிய கூட்டிணைப்பொன்று இல்லாமை காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் திட்டங்களை தயாரித்து தயார்படுத்தல் என்பன மந்த கதியில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

6. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

6.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இரண்டு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளீட்டு உதவியபளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இதன் பிரகாரம் தொழிநுட்ப மற்றும் பொறியியல் நுட்ப முறைகளை பயன்படுத்தும் சபையின் கருமங்களை கணக்காய்வு செய்வதற்காக தகைமையுடைய உத்தியோகத்தர்கள் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இணைப்பதற்கு சபை தவியிருந்தது.

6.2 பெறுகை செயற்பாடு

பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 06 உருப்படிகள் பெறுகை செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பெறுகைக்காக எதிர்பார்க்கப்பட்ட 10 உருப்படிகள் அத்திகதிகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வருடாந்த பெறுகை திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

11

6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் என்பவற்றிற்கு இடையே 12 சதவீதம் முதல் 138 சதவீதம் வரையான வீச்சிலலும் பாதிடப்பட்ட செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கு இடையே 10 சதவீதம் முதல் 1094 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

6.4 ஆண்டறிக்கை சபைக்கு முன்வைத்தல்

2016 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6.5 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

06 வருட கட்டாய சேவைக்காலத்திற்கு மற்றும் ரூபா 1,308,699 இற்கான பிணை முறியொன்றின் கீழ் 2005 ஆண்டின் போது புலமைப்பரிசில் ஒன்றிற்காக வெளிநாடு சென்றிருந்த பெண் புவிச்சரிதவியலாளர் ஒருவர் புலமைப் பரிசிலின் பின்னர் உடன்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் வேறு நிறுவனம் ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். அவ்விடுவித்தலுக்காக 04 வருட கால கட்டாய சேவைக் காலத்திற்கு மற்றும் ரூபா 435,600 இற்கான பிணை முறியொன்றிற்கு கையொப்பமிடப்பட்டிருந்தது. பெண் உத்தியோகத்தர் உடன்பட்டிருந்த 02 உடன்படிக்கைகளுக்கு இணங்க செயற்படாமல் 2011 ஆண்டு முதல் சபையின் சேவையில் இருந்து நிரந்தரமாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கைகளின் பிரகாரம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,744,299 இற்கான பிணை தொகையை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

ජාතික විගණන කාර්යාල
தேசிய கணக்காய்வு அலுவலக
NATIONAL AUDIT OFFIC
NAOSL

12

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு	அவதானிப்புக்கள்
(அ) கணக்கீடு	சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகள் உரிய முறையில் கணக்கீடு செய்யாமை.
(ஆ) செயலாற்றல்	எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்காமை
(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்	தீர்ப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமை.
(ஈ) ஆய்வுக் கற்கைகள் மேற்கொள்ளல்	திட்டமிட்டுள்ளவாறு ஆய்வுக் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.
(உ) சொத்துக்கள் கட்டுப்பாடு	சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்காமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கையின் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்		முகாமைத்துவ கருத்துக்கள்
(அ)	மஹியங்கனை கல்வி வலயத்தில் 09 பாடசாலைகளில் குழாய் கிணறுகள் நிர்மாணத்தின் புவிச்சரிதவியல் அளவை நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 02 பாடசாலைகளுக்குரிய ரூபா 82,110 தொகை மாத்திரம் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 298,252 தொகையான வருமானத்திற்கு எடுக்காமல் கிடைத்த முற்பணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	2018 ஆம் ஆண்டில் மீதியாகவுள்ள 07 பாடசாலைகளின் சேவை தொடர்பாக 23.05.2018 ஆம் திகதியிடப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் 15886 வழங்கப்பட்டிருந்த மற்றும் இதன் அடிப்படையில் வருமானம் பெறப்பட்டது.
(ஆ)	மீளாய்வாண்டின் போது கணக்கீட்டு வழக்குகள் காரணமாக இரண்டு ஊழியார்களுக்காக ரூபா 29,721 ஆன பணிக்கொடை கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2018 ஆம் ஆண்டின் நிதி நிலமைக்கூற்றினை தயாரிக்கும் பொழுது தவறுகள் மீளத்திருத்த வேண்டியிருக்கின்றன மற்றும் ஒரு வருடத்திற்கு மேலாக பணிக்கொடைக்கான ஏற்பாட்டினை கணிப்பிடும் பொழுது இரண்டு ஊழியர்களுடைய சேவைக்காலமானது ஒரு வருடத்திற்கு மேற்பட்டதாக எடுக்கப்பட்டிருந்தன.
(இ)	ஒரே கொடுக்கல் வாங்கல்களுக்காக இரண்டு பட்டியல்கள் வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 44,677 ஆல் கிடைத்த சேவை முற்பணம் குறைத்தும் வருமானம் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.	தவறுதலாக களனிகா வித்தியாலயத்திற்கு இரண்டு பற்றுச்சீட்டுக்கள் புவியியல் ஆராய்ச்சி மேற்கொண்டமைக்காக வழங்கப்பட்டிருந்தன. இரு தடவைகள் ரூபா.172,500 இல்

		இருந்து பற்றுச்சீட்டுக்கள் ரூபா.44,677.50 பெறுமதியானது. குறைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா. 127,822.50 பெறுமதியான மிகுதி தொகையை உடைய பற்றுச்சீட்டுக்களைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றன.

2.3 <u>பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்		முகாமைத்துவ கருத்துக்கள
(அ)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதியான ரூபா 18,849,408 ஆல் ரூபா 3,178,291 ஓராண்டிற்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகளாக இருந்ததுடன் மொறஹகந்த செயற்திட்டமொன்றிலிருந்து பெற வேண்டிய ரூபா 860,800 தொகையான கடன்மீதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது.	புத்தகத்திலிருந்து ரூபா. 860,800 பெறுமதியுடைய கடன்பட்டோர் மீதியினை பதிவளிப்பதற்கு 28.03.2018 திகதியிடப்பட்ட (சபையின் அறிக்கை இலக்கம 1199) சபையினால் தீர்மானிக்கப்பட்டு சபையினால் அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இதனை கணக்கேட்டுப்புத்தகத்தில் நாட்குறிப்ப இல. துஏ-18.27 இனால் பதிவு செய்யப்பட்டதுடன் ஏனைய கடன்பட்டோர் மிகுதியினை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன.
(ஆ)	214நபர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து பல்வேறு சேவைகள் நிறைவேற்றிக் கொடுப்பதற்காக கிடைத்த ரூபா 82,380,321 தொகையான சேவை முற்பணங்களிலிருந்து ரூபா 2,611,379 தொகை ஒரு வருட காலத்தை மிகைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட வேலைகளை நிறைவேற்றி கொடுப்பதற்கு சபை தவறியிருந்தது.	தாமதமான சேவையினை வழங்குகின்றவர்களுடைய முற்பணக் கணக்கு மீதியினை செலுத்துவதில் திரும்பவும் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றன.

2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு		இணக்கமின்மைகள்	முகாமைத்துவ கருத்துக்கள்
(அ)	1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவு	திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் 18 பேருடன் கூடிய மதியுரைக் குழுவொன்று தாபிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 9 பேருடன் கூடிய மதியுரைக்குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்தது.	20.02.2018 ஆம் திதியிடப்பட்ட கூட்டத்தில் 12 அங்கத்தவர்கள் பங்கேற்றிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் முதல் ஆலோசனைக் குழுவுக்க ஒன்பது முகவர் அங்கத்தவர்களின் நிறுவனங்களும் பங்கேற்றிருந்தன.
(ஆ)	1978 திசெம்பர் 19ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை கணணிமயப்படுத்தி முன்னேற்றநிலையிலுள்ளது.
(இ)	2003 ஜீன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தி	27 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது அவர்களின் சம்பளத்திற்கு மேலதிகமாக ரூபா 1,964,633 ஆன விஷேட படியொன்று சபையினால் செலுத்தியிருந்த போதிலும் அதற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.	திறைசேரிச் செயலாளரினால் 25.10. 2017 திகதியிடப்பட்ட 05/2017 இலக்க முகாமைத்துவ சேவைகளுக்கான சுற்றறிக்கையானது வெளியிடப்பட்டிருந்தது. அதில் 2017.10.01 ஆம் திகதியிலிருந்து சிரேஷ்ட அலுவலர்களுக்கு தொழில் தகமை ஊக்குவிப்பு கொடுப்பனவு தீர்மானிக்கப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 6,743,000 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,092,000 இற்கான தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 20,349,000 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 59,243,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டின் நிர்வாக செலவினம் ரூபா 38,057,000 ஆலும் ஏனைய செயற்திட்ட செலவினம் ரூபா 28,121,000 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளின் பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான நிதி விளைவுகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும் 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளின் போது மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்தபோது சபையின் பங்களிப்பு 2013 ஆண்டு முதல் முன்னேற்றமடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 227,278,000 தொகையாகியிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்		முகாமைத்துவ கருத்துக்கள்
(அ)	சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டிய மொத்த செயற்பாடும் நிறைவேற்றுவதற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்கு முன்னைய பாதீட்டு மதிப்பீடு மற்றும் பெறுகைத்	இவ்வாறான குறைபாடுகள் ஏற்படமால் தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடலடிக்கைகள் எடுக்கப்படும்.

	திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டம் பாதீட்டு மதிப்பீடு மற்றும் பெறுகைத் திட்டம் என்பவற்றை ஒன்றுக்கொன்று ஒப்பிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	
(ஆ)	மீளாய்வாண்டிற்குரிய பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான அறிக்கையை சபை தயாரித்திருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்குரிய நிதிச் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்குரிய நிதிச் செயலாற்றல் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	இவ்வாறான குறைபாடுகள் ஏற்படமால் தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடலடிக்கைகள் எடுக்கப்படும்.

4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
(அ)	மீளாய்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் 08 விடயங்களின் கீழ் 575 ஆய்வு அலகுகள் நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சபையினால் 356 ஆய்வு அலகுகள் மாத்திரம் நிறைவேற்றியிருந்ததுடன் நிறைவேற்றப்படாத எண்ணிக்கை 219 தொகையாக இருந்தது. செயற்பாடுகள் நிறைவேற்றப்படாத எண்ணிக்கை 24 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அதற்காக சபைக்கு சொந்தமான நீர் விஞ்ஞானிகளின் பற்றாக்குறை, நாட்டில் காணப்பட்ட அனர்த்த சந்தர்ப்பங்களுக்கு அவர்களை ஈடுபடுத்த நேர்ந்தமை வளங்கள் மற்றும் தொழில்நுட்ப பதவியணியினர் வரையறுக்கப்பட்டதாக ஆகிய காரணங்கள் தாக்கமளித்திருந்தது.	சபையின் தொழில் நுட்ப அலுவலர்கள் மற்றும் நாட்டின் வரையறுக்கப்பட்ட வளங்கள் அவசர அனர்த்த சூழ்நிலைகள் நிலவிய போது புவியியல் ஆய்வுகளை மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு இந்த சூழ் நிலைமையே காரணமாகும்.
(ஆ)	**ஆய்வு கற்கைகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள்**	
(1)	2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை நீர் மீதான நிலைமை மற்றும் அவற்றில் பொது மக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைப் பரிசோதனை செய்வதற்காக ரூபா 133,550,000 இற்கான மதிப்பீட்டுக் கிரயத்திற்கு 08 ஆய்வுக் கற்கைகள் ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 67,159,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த கற்கை செயற்திட்டற்களில் 04 இனை 2017 திசெம்பர் 31 திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும்	நீர் வளங்கள் சபையின் ஆலோசனைக் குழு 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவசரமாக ஆராய்ச்சி ஆய்வுகளுக்கான திட்டங்களை மற்றும் அறிக்கைகளை ஏற்கனவேயுள்ள குறைபாடுகளினை குறைப்பதற்கு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருக்கின்றது.

	அந்த 04 ஆய்வுக்கற்கைகளை எதிர்பார்த்த விதமாக பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் ஆய்வுக் கற்கைகளின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	
(2)	ஆய்வுக் கற்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக முழு நேர அடிப்படையில் ஆய்வு உத்தியோகத்தரொருவர் நியமனம் செய்யப்பட வேண்டும்மெனினும் சபையினால் அனைத்து ஆய்வுக்கற்கைகளுக்குமாக ஆய்வு உத்தியோகத்தராக சபையின் பொது முகாமையாளர் நியமனம் செய்யப்பட்டிருந்தார் அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக ஆய்வு கற்கைகளில் பங்குபற்ற நேரிட்டுள்ளமையால் திட்டமிட்டுள்ள காலப்பகுதியில் ஆய்வுக் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.	ஆராய்ச்சி ஆய்வுகள் வெற்றிகரமாக முடிக்க ஒரு ஆராய்ச்சி அதிகாரி முழு நேர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்றாலும், தற்போது இருக்கும் குறைந்த ஊழியர்கள் அதற்கு போதுமானதாக இல்லை. இருப்பினும், வாரியத்தின் நடவடிக்கைகளால் செய்யப்படும் பொறுப்புகளும் கடமைகளும் எதிர்காலத்தில் பணியாளர்களை நியமிப்பதற்கு எடுக்கப்படும்.
(3)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆய்வுக் கற்கைகளுக்கான மதிப்பீட்டுத் தொகையில் அடைந்திருந்த நிதி முன்னேற்றம் 15 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களின் தாமதக் காலம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையாக இருந்தது. மேலும் ஆய்வு கற்கைகளை நீடிக்கும் போது அதற்காக காரணம் மற்றும் மதிப்பீடுகள் என்பன காட்டப்பட்டிருக்கவில்லை.	வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப ஊழியர்கள் காரணமாக ஆராய்ச்சி ஆய்வுகள் விரிவாக்கப்பட வேண்டும். எனினும், எதிர்காலத்தில் ஆராய்ச்சி ஆய்வுகள் திட்டமிட இந்த உண்மைகள் நடவடிக்கைகள் கருத்தில் கொள்ளப்படும்.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்		முகாமைத்துவ கருத்துக்கள்
(அ)	2017 யூன் 29 ஆந் திகதி மதியுரைக் குழு கூடியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 08 ஆய்வுகளின் அறிக்கை மதியுரை கூட்டத்தின் குழுவின் ஆலோசனைகளுக்காக சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் கூட்டத்தில் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை கலந்துரையாடுவதற்கு 29 யூன் 2017 ஆம் திகதி ஆலோசனைக் குழு வரவழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.
(ஆ)	வேறு அரச நிறுவனங்களுக்குரிய 03 வாகனங்கள் 1981, 2009 மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அவ்வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அணை பாதுகாப்பு நடவடிக்கையானது தொடக்கத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முடிக்கப்பட வேண்டியிருக்கின்றது. சபையின் பெயரின் கீழுள்ள வாகனங்கள் அகற்றுவதற்கு அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.
(இ)	நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 31 இருப்பு உருப்படிகளில் பற்றாக்குறையும் இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	2017 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களின் கணக்கெடுப்பு வாரியத்தை நடத்துகையில், முந்தைய ஆண்டு ஆய்வாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலுவைத் தொகை அலுவலக சாதனங்களின் பேரேட்டு நிலுவைகளாகக் காட்டப்பட்டது. எனவே 2017 ஆம் ஆண்டு ஒவ்வொரு பிரிவிலும் முடிவடைந்த நிலுவைத் தொகையின் மாற்றங்கள் இந்த சமாதானத்திற்கான காரணம் ஆகும். அலுவலக உபகரணங்களின் கணினிமயமாக்கல் நடைமுறை முடிந்தவுடன் இந்த சூழ்நிலையை சமாளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	தேவைப்பட்டினை இனங்காணாமல் இயந்திர உபகரணங்களுக்கான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 171,516,000ஆன இருப்புக்களில் ரூபா 76,474,390 மெதுவாக அசையும் இருப்புக்களும் காலாவதியான இருப்புக்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.	மோட்டார் வாகனங்கள், இயந்திரங்களுக்கு பயன்படுத்துவதற்கான உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களுக்காக கருத்தில் கொள்ளப்பட்ட தொகையானது இந்த இருப்பு உருப்படியினுள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன இவற்றினை பயன்பாட்டிலிருந்து அகற்ற முடியாமலுள்ளது.

4.4 முறையாக கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	சபையின் தலைமை அலுவலகம் இரத்மலான மற்றும் வவுனியா வேலைத் தளங்கள் மற்றும் அநுராதபுர சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் சபைக்கு கையோற்கப்படாமல் மீளாய்வாண்டின் தொடக்கம் வரையிலும் அக்காணிகளில் ரூபா 6,258,000 வெளியிடப்பட்டு புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டும் காணப்படும் கட்டிடங்களில் மாற்றங்களும் சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.	இவை கொடுப்பனவு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் குத்தகை அடிப்படையில் சரியானவற்றை பயன்படுத்துவதன் மீது பெற வேண்டியிருக்கின்றன.

4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் வளங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	2003 ஜீன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவுக்கு முரணாக சபையின் கடமையை நிறைவேற்றுவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த சாரதியொருவர் சபையின் செயற்பாடுகளுக்கு புறம்பாக வரிசை அமைச்சின் செயற்பாடுகளுக்காக 2017 சனவரி 11 ஆந் திகதி முதல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா145,392 தொகை சம்பளம் மற்றும் படியாக சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	நீர்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கு அமைய அமைச்சுக்களின் அலுவலகத்தின் நீர் வளங்கள் சபையினால் சேவைக்காக அடிப்படைச்சம்பளமானது கொடுப்பனவு செய்யப்பட்டது.

5. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 "நிகழ்ச்சி நிரல்" பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமொன்றும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக நீர் வளங்கள் சபையினால் தமது விடயப்பரப்பிற்கு கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.	
(அ)	மேற்குறித்ததன் பிரகாரம் 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக நீர் வளங்கள் சபை அறிந்திருந்த போதிலும் அது தொடர்பான இலக்குகள், அடிப்படை தரவுகள் இலக்குகள் அடையப்பட வேண்டிய மைல்கல் உட்பட செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், நீர்ப்பாசன சபையால் நிறைவேற்றப்பட்ட பிரதான குறிக்கோள்கள், நீர்ப்பாசன மற்றும் முகாமைத்துவ சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்ட நிலத்தடி நீர் வளங்களை அபிவிருத்தி செய்தல்,

		அதேவேளை வாரியத்தின் இலக்கு மற்றும் இலக்குகள், அடிப்படையிலான தரவு மற்றும் செயல்திறன் அளவீட்டு தொடர்பான இடைநிலை இலக்குகள், முக்கிய செயல்திறன் குறிகள் வாரியத்தின் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அதனுடன் தொடர்புடைய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. கணக்காய்வில் காட்டியுள்ள படி இந்த நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்
(ஆ)	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பாக நீர் வளங்கள் சபையின் செயற்பாடு தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினர்களுக்காக சுற்றாடல் அமைச்சு, தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற தரப்புகளை இனங்கண்டிருந்த போதிலும் நிறுவனத்திற்குரிய இலக்கை வடிவமைக்கும் போது பங்குபற்றுனர்களின் நுழைவு நிரூபணமாவில்லையென மேலும் அவதானிக்கப்பட்டது.	சுற்றுச்சூழல் அமைச்சகம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் வாரியத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏனைய கட்சிகளுடன் இணைந்து சபை அதன் செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றது. நீர்ப்பாசன மற்றும் நீர்வழி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட திணைக்களங்களாகும்.

(இ)	ஏதேனும் செயற்படொன்றின் சரியான செயலாற்றலை மதிப்பீடுவதற்காக சரியான தரவுகள் அடிப்படை யொன்று காணப்படுதல், அத்தியாவசியமாக இருந்த போதிலும், சபையினால் நிலைபோறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதை மதிப்பீடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதனிக்கப்பட்டது இதற்காக நிதி எற்பாடு போதியளவு காணப்படாமை, பௌதீக வசதிகள் போதியளவில் இல்லாமை மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள், காணப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக உள்ளதென மேலும் அவதானிக்கப்பட்டது.	வருடாந்த மைல்கற்களை முன்வைப்பதற்காக வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை மேலும் ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும், இது நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு அவசியமானதாகும்.
(ஈ)	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி அடையும் போது குறித்த செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான தேவையான வருடாந்த அடைவுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளுக்கு விரிவான கவனம் செலுத்தப்படும், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
(உ)	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தயார்ப்படுத்தும் போது ஏனைய நிறுவனங்களுடன் உரிய கூட்டிணைப்பொன்று இல்லாமை காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் திட்டங்களை தயாரித்து தயார்படுத்தல் என்பன மந்த கதியில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.	தேவையான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் வாரியத்தின் பிற உடல் மற்றும் நிதி ஆதாரங்களை விரிவாக்குவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நிலையான வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

6. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

6.1 உள்ளகக் கணக்காய்வு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இரண்டு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளீட்டு உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இதன் பிரகாரம் தொழிநுட்ப மற்றும் பொறியியல் நுட்ப முறைகளை பயன்படுத்தும் சபையின் கருமங்களை கணக்காய்வு செய்வதற்காக தகைமையுடைய உத்தியோகத்தர்கள் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இணைப்பதற்கு சபை தயாராகவிருந்தது.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர், உதவிக் கணக்காய்வாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பம்) தொடர்பான பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், உள்ளக கணக்காய்வாளர் தவிர்ந்த பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது அனுமதி வழங்கியிருக்கவில்லை.

6.2 பெறுகை செயற்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 06 உருப்படிகள் பெறுகை செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பெறுகைக்காக எதிர்பாரக்கப்பட்ட 10 உருப்படிகள் அத்திகதிகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வருடாந்த பெறுகை திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதனிக்கப்பட்டது.	அதிக சாத்தியமான பெறுகை நடைமுறைகளின் உண்மையானவற்றுக்கும் பாதீட்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன.

6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் என்பவற்றிற்கு இடையே 12 சதவீதம் முதல் 138 சதவீதம் வரையான வீச்சிலலும் பாதிடப்பட்ட செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கு இடையே 10 சதவீதம் முதல் 1094 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்படமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் உண்மையான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் மற்றும் பாதீட்டின் வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான சாதகமான வேறுபாடுகளை குறைப்பதற்கு கவனத்தினை செலுத்த வேண்டியுள்ளது.

6.4 ஆண்டறிக்கை சபைக்கு முன்வைத்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	2016 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது அச்சிடல் தொழிற்பாட்டில் இருக்கின்றன.

6.5 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
	06 வருட கட்டாய சேவைக்காலத்திற்கு மற்றும் ரூபா. 1,308,699 இற்கான பிணை முறியொன்றின் கீழ் 2005 ஆண்டின் போது புலமைப்பரிசிலின் பின்னர் உடன்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் வேறு நிறுவனம் ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். அவ்விடுவித்தலுக்காக 04 வருட கால கட்டாய சேவைக் காலத்திற்கு மற்றும் ரூபா. 435,600 இற்கான பிணை முறியொன்றிற்கு கையொப்பமிடப்பட்டிருந்தது. பெண் உத்தியோகத்தர் உடன்பட்டிருந்த 02 உடன்படிக்கைகளுக்கு இணங்க செயற்படாமல் 2011 ஆண்டு முதல் சபையின் சேவையில் இருந்து நிரந்தரமாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும்	அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் நீர்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சுகளை ஒருங்கிணைக்கப்பட்ட காலத்திலிருந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மேலதிக செயலாளர் சபையிடம் கையளிக்கப்பட்டு அமைச்சின் செயலாளரிடமிருந்து

	உடன்படிக்கைகளின் பிரகாரம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா.1,744,299 இற்கான பிணைதொகையை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அனுமதியினைப் பெற்று நடவடிக்கை மேறகொள்ளப்பட்டன.

7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாடுகள் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு		அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துக்கள்
(அ)	கணக்கீடு	சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகள் உரிய முறையில் கணக்கீடு செய்யாமை.	பிரிவுகளினால் வெளியேற்றப்படும் குறைபாடுகளை சமாளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன மற்றும் இவ் நடவடிக்கைகள் தொடர்பாக கவனிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
(ஆ)	செயலாற்றல்	ஏதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்காமை.	
(இ)	பேற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்	தீர்ப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமை	
(ஈ)	ஆய்வுக் கற்கைகள் மேற்கொள்ளல்	திட்டமிட்டுள்ளவாறு ஆய்வுக் கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.	
(உ)	சொத்துக்கள் கட்டுப்பாடு	சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்காமை.	

பின்னிணைப்பு

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2010/23 - 2017 මාර්තු මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.03.16

2010/23 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, நீர் வளங்கள் சபைச் சட்டம்

16 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா ஆகிய நான், நீர் வளங்கள் சபையின் 1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம் (1999 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட) 16 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நீர் வளங்கள் சபையின் கட்டளைகளை இத்தால் வெளியிடுகின்றேன்.

காமினி விஜித் விஜயமுனி சொய்சா,
நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர்.

நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு,
கொழும்பு,
2017, மாச்சு 15.

நீர் வளங்கள் சபை 1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின் கீழ் அடங்கிய விடயங்கள் தொடர்பாக அதே சட்டத்தின் 16 (1) மற்றும் 16 (2) ஆம் ஆகிய பிரிவுகளின் கீழ் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சர் அவர்களினால் செய்யப்படும் கட்டளைகள்

1. ஏதேனும் அரச அல்லது உள்ளூராட்சி நிறுவனம், அரச சார்பற்ற அமைப்பு அல்லது நிறுவனம் அல்லது தனி நபர் ஒருவரினால் இதன் பின்பு கீழ்க் குறிப்பிடப்படும் செயற்பாடுகளுக்காக அல்லது திட்டங்களுக்காக இயற்கை ஊற்று நீர் அல்லது நிலத்தடி நீர் பயன்படுத்தப்படுவதாக இருந்தால் அச்செயல் அல்லது திட்டத்தின் பூரண விவரங்கள் அடங்கிய திட்டத்தின் முன்மொழிவுகளை, நீர் வளங்கள் சபையின் மேற்பார்வையின் மற்றும் அதனால் வழங்கப்படும் உத்தரவுக்கு ஏற்றவாறு மற்றும் அதன் அனுமதியுடன் செயல்படுத்த வேண்டும். அச்செயற்பாட்டை அல்லது திட்டத்தை அமுல்படுத்த முன்பதாக நீர் வளங்கள் சபையின் எழுத்துமூல அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும் அதாவது :-

(i) (அ) விவசாய வேலைகளுக்காக விவசாயக் கிணறுகள் அமைக்கும் போது விட்டம் அடி 12 அல்லது அடி 12 ஐத் தாண்டும் விவசாயக் கிணறுகள் ;

(ஆ) விவசாய வர்த்தக வேலைகளுக்காக அமைக்கப்பட்ட ஆழம் குறைவான கிணறுகள் அல்லது குழாய்கிணறுகளும், தொழிற்சாலைகள் அல்லது வர்த்தக விவசாய நடவடிக்கை, கருத் திட்டம் அல்லது இயற்கை ஊற்று நீர், உற்பத்தி குழாய்க் கிணறுகள் அல்லது ஆழம் குறைவான கிணறுகள் என்பவற்றை பயன்படுத்தி ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகள் (இணைப்பு 1).

(2) (i) குழாய்க் கிணறுகள் அமைக்கும் தொழிலில் ஈடுபடும் சகலரும் துளையிடும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முதல் நீர் வளச் சபையில் பதிந்து அனுமதியைப் பெற வேண்டும்.

1A - G 25277— 27 (2017/03)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

நீர் வளச் சபையினால் வழங்கப்படும் பரிந்துரைகேற்ப குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுவதுடன் நீர் வளச் சபையின் மேற்பார்வையின் கீழ் கிணற்றின் பாதுகாப்பான ஈட்டம் மதிப்பிடுவதுடன் குறித்த கிணற்றின் பாதுகாப்பான ஈட்டம் சம்பந்தமான அனுமதியை பெற வேண்டும். தினமும் கிணற்றிலிருந்து இறைக்கும் நீரின் கொள்ளளவை கண்காணிப்பதற்கு தொழிற்சாலையின் உரிமையாளரினால் ஒரு பாய்ச்சல் மீற்றர் பொருத்தப்படுவதுடன் தினமும் இறைக்கும் நீரின் கொள்ளவு தரவை பராமரிப்பு செய்யப்பட வேண்டும். நீர் வளச் சபையினால் எங்கேயும் எப்போதும் எல்லாம் இந்தப் பதிவுகளை காட்டும்படி வேண்டும் போது கிணற்றின் உரிமையாளர் காட்ட வேண்டும்.

(iii) இணைப்பு 2 இல் சுட்டி காட்டப்பட்ட மாதிரிக்கு அமைவாக ஒவ்வொரு மூன்று மாதத்துக்கும் மேலே குழாய் கிணறுகள் அமைப்பதற்கு பதியப்பட்ட சகல நிறுவனங்களாலும் தரவுகள் நீர் வளச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நீர் வளச் சபை இந்த தரவுகளை அவர்களினுடைய தரவு வங்கியில் பராமரிப்பதுடன் எதிர்கால கருத்திட்டங்களின் நிலத்தடி நீர் முகாமைத்துவத்துக்கும் திட்டமிடலுக்கும் அவற்றை பயன்படுத்தும்.

3. நீரை போத்தலில் அடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபட உத்தேசித்துள்ள ஏதேனும் அரச மற்றும் உள்ளூராட்சி நிறுவனம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏதாவது நிறுவனங்கள் அல்லது தனி நபரொருவரினால் உற்பத்தி தேவைக்காக நீரூற்றுகள் அல்லது நிலத்தடி நீரிலிருந்து நீரை உபயோகிப்பதானால் இணைப்பு 4 இல் சுட்டிக் காட்டப்பட்டவாறு பெயர் பெற்ற இரசாயன ஆய்வு கூடத்தில் ஒரு நீர் மாதிரி ஒவ்வொரு ஆறு மாதத்துக்கும் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் அந்த அறிக்கைகள் நீர் வளச் சபைக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. வர்த்தக விவசாயம் அல்லது கைத்தொழில் நிறுவனத்துக்காக மாதத்துக்கு 30,000 லீற்றரிலும் கூடுதலாக நிலத்தடி நீர் பெறப்படுவோரினால் நீர் வளச் சபையிலுருந்து ஒரு சுற்றளவு தொழில் உரிமை அறிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. இயற்கை ஊற்று நீர் அல்லது நிலத்தடி நீர் அவர்களுடைய உற்பத்திக்காக உபயோகிக்கும் கைத்தொழில் நிறுவனங்கள் அல்லது பணி நிலையங்களுக்கும் முன்னறிவித்தலுடன் அல்லது முன்னறிவித்தல் இல்லாமல் ஒரு நாளில் எந்த நேரத்திலும் அல்லது இணங்குகிற காலத்தில் சென்று பரிசோதிக்கும் அதிகாரம் நீர் வளச் சபைக்கு உண்டு.

6. மேலே பந்திகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு செயற்படாத அரச அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அல்லது நிறுவனத்திற்கு அல்லது நபருக்கு எதிராக 1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தின் மற்றும் 1999 இல் திருத்தம் செய்யப்பட்ட 42 ஆம் இலக்க நீர் வளங்கள் சபை சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் கட்டளைகளுக்கு அமைய அவ்வாறாகச் செயற்படாத திட்டங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நீர் வளச் சபைக்கு உரிமை உண்டு.

இணைப்பு 01

நிலத்தடி நீரை அடிப்படையாக கொண்ட கைத்தொழில் நிறுவனங்கள் :

1. நீரை போத்தலில் அடைக்கும் நிறுவனங்கள்
2. குளிர்பான நிறுவனங்கள்
3. சலவையகங்கள்
4. வாகன சேவிஸ் நிறுவனங்கள்
5. ஹோட்டல்கள்
6. தாவரப் பூங்காக்கள்
7. விவசாய தோட்டங்கள்
8. கால்நடை பண்ணை வளர்ப்பு நிறுவனங்கள்
9. தனிப்பட்ட நிலத்தடி நீர் விற்பனை நிலையங்கள்
10. தும்பு றப்பர் கைத்தொழில் நிலையங்கள்
11. ஐஸ் (குளிர்) நிறுவனங்கள்
12. நீர் வளச் சபையின் தீர்மானத்துக்கு அமைய ஏதாவது வேறு கைத்தொழில் நிறுவனங்கள்

இணைப்பு 02

ஆழம் குறைவான ஆழம் கூடிய குழாய்க் கிணறுகள் சார்ந்த தரவுகள் :

1. கிணற்றின் GPS ஆயத் தொலைகள்
2. புவிப் பௌதிகவியல் தரவு
3. கிணற்றின் விட்டம்
4. கிணற்றின் ஆழம்
5. கிணற்றின் செயற் பதிவு

ஆழம் குறைவான ஆழம் கூடிய குழாய்க் கிணறுகள் சார்ந்தரவுகள் : *(தொடர்ச்சி)*

6. கிணற்றின் துளையிடு பதிவு
7. கிணற்றின் நீர் மட்டம்
8. கிணற்றின் பம்பிச் சோதனை அறிக்கை
9. நீர் மாதிரிகளின் பகுப்பாய்வு தரவுகள் (பௌதிக, இரசாயன, பக்டீரியா தரவுகளும், பார உலோகங்களின் தரவுகளும்)
10. துளையிடும் போது எதிர்ப்படும் வெடிப்புகளின் விபரங்கள்

இணைப்பு 03

விவசாய கிணறுகள் சார்ந்த தரவுகள் :

1. விவசாய கிணற்றின் GPS ஆயத் தொலைகள்
2. புவிப் பௌதிகவியல் தரவு
3. விவசாய கிணற்றின் விட்டம்
4. விவசாய கிணற்றின் ஆழம்
5. விவசாய கிணறு கற்பாறை வரைக்கும் தோண்டப்பட்டதா?
6. கிணற்றின் நீர் மட்டம்
7. பம்பிச் சோதனை அறிக்கை
8. நீர் மாதிரிகளின் பகுப்பாய்வு தரவுகள் (பௌதிக, இரசாயன, பக்டீரியா தரவுகளும், பார உலோகங்களின் தரவுகளும்)

இணைப்பு 04

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க இரசாயன ஆய்வு கூடங்கள் :

1. கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவனம் (ITI)
2. நீர் வளச் சபை (WRB)
3. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (NWS & DB)
4. இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLS)
5. புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் (GSMB)
6. தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு (NBRO)

இணைப்பு 05

இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்ட எல்லா நிறுவனங்களும்.

03 - 1241

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

நீர்வளச் சபையினால் 2017 ஆண்டிற்காக நடாத்தப்பட்ட செயற்றிட்டங்களின் பௌதீக மற்றும் நிதி வளர்ச்சி-சுருக்கம்

2.1 தரச்சேரி கொடுப்பனவுகளின் கீழான செயற்றிட்டங்கள்

எட்டு ((08)திறைசேரி கொடுப்பனவுகளின் கீழான செயற்றிட்டங்கள் நீர்வளச் சபையினால் 2017 ம் ஆண்டில் நடாத்தப்பட்டது. இச்செயற்றிட்டங்கள் தலைமை மற்றும் மாகாணக் அலுவலகங்களினால் செயல்படுத்தப்பட்டன.

2.1.1 . அடிக்கடி மாறுபடுகின்ற திணைநில நீண்டகால நிலத்துநீர் கண்காணிப்பு செயற்றிட்டம்(LTGM) (ரூபா மில்லியன் 2.5)

இச்செயற்றிட்டமானது 06 நீண்ட கால பூரணப்படுத்தப்பட்ட நிலத்து நீர் கண்காணிப்புச் செயற்றிட்டங்களின் இணைந்த ஒரு செயற்றிட்டமாகும். ஒவ்வொரு செயற்றிட்டப் பகுதியிலும் அறிமுகம் காணப்பட்ட நிலத்து நீர் பிரச்சனைகளை கருத்தில் கொண்டு கண்காணிப்பு வலையமைப்பை நிறுவ செயற்றிட்ட ஆரம்பத்தில் துளைத் துளைவுகள் நிர்மாணிக்கப்பட்டன.

2.1.2 யாழ்ப்பான தீபகற்பத்திற்கான நிலத்து நீர் கண்காணிப்பு வலையமைப்பைஅபிவிருத்தி செய்தல். (ரூபா மில்லியன் 3.5)

இவ்வாய்வின் முக்கிய நோக்கமாவது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் நிலத்து நீரின் தன்மையை அறிமுகம் கண்டு நிலத்து நீரின் தரத்தை உயர்த்துவதற்கு ஒரு நீண்ட கால கண்காணிப்பு வலையமைப்பை நிறுவி மட்டுப்படுத்தப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்தி கடைசியாக அப்பிரதேசத்திற்கான ஒரு நிலத்து நீர் மாதிரிக்காகச் செல்லுதல்.
இச் செயற்றிட்டத்தின் கீழ் நீர்புவியியல் ஆய்வுகள், குழாய்க் கிணறுகள் தோண்டுதல், பம்புதல் பரிசோதனைகள் நடத்துதல், கண்காணிப்பு கிணறு உள்ள பிரதேசங்களை சரிமட்டம் செய்தல், நீரினை வகைப்படுத்தல் மற்றும் நீர் பகுப்பாய்வுகள் செய்து முடிக்கப்பட்டன.
நீரின் பகுப்பாய்வுகளின் பெறுபேறுகள் மூலம் பருவ கால மழையில் முன் பின் EC, உப்புத் தன்மை, நைற்றேட், TDS, குளோரைட், நீரின் மட்டம் மாற்மடைவது கண்டறியப்பட்டது .

2.1.3 காலநிலை மாற்றத்தினால் கடலோர நீர்ப்பாறை அமைப்புகளுக்கு ஏற்படும் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள். (ரூபா மில்லியன் 2.5)

இது ஒரு திறைசேரி கொடுப்பனவு மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் செயற்றிட்டமாகும். இது கால நிலை மாற்றத்தினால் நாட்டின் கடலோர நீர்ப்பாறை அமைப்புகளுக்கு ஏற்படும் தாக்கங்களினால் உருவாகும் நீர்ப்பிரச்சனைகளை அறிமுகம் காண்பதற்காக 2015 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
இந்த ஆய்வின் நோக்கத்தை அடையும் பொருட்டு கொழும்பு முதல் வெலிகம வரையிலான மேற்கு கடலோரப் வளையத்திலும் திருகோணமழை மாவட்ட கடலோர நீள்வரி துண்டு நிலத்திலும் இருக்கும் மொத்தமாக 74 கிணறுகள் (50 ஆழமற்ற கிணறுகள் மற்றும் 24 பரிசோதனைக் கிணறுகள்) கண்காணிப்பு வலயத்தை நிறுவ தெரிவு செய்யப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கண்காணிப்பு பிரதேசங்களை முல்லைத்தீவு மாவட்டம் வரை நீடிக்கும் பொருட்டு வடக்கு கடலோரப் பிரத்தேச முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் எட்டு (08) பரிசோதனைக் கிணறுகள் தோண்டப்பட்டது. கிணற்றின் விளைச்சல் நிமிடத்திற்கு 30 லீட்டர் முதல் 750 லீட்டர் நிமிடங்களாகும். நிர்மாணிக்கப்பட்ட குழாய்க் கிணறுகளில் பாதுகாப்பான விளைச்சலை தீர்மானிக்கவும் கடல் நீர் உட்புகுவதை பம்புதல் பரிசோதனைகள் நடாத்தப்பட்டு மின் கடத்தித்திறன் அளவீடு செய்யப்பட்டது. கண்காணிப்புத் தரவுகளின் பகுப்பாய்வு பெறுபேறுகளுக்கு அமைய மின் கடத்தித்திறன், உப்புத்தன்மை போன்ற இரசாயன அளவுருக்கள் வறண்ட காலத்தில் அதிகமாகவும் ஈரமான காலத்தில் நீர்கலப்புக் காரணமாக மேற்கூறிய அளவுருக்கள் குறைவடைந்தது.

பரிந்துரைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள்

காலநிலை மாற்றத்துடல் கடலோர நீர்ப்பாறைகளின் இரசயான அளவுருக்களை கண்காணித்தல், நீர் மட்டம் ஏற்றம் இறக்கம் பற்றி அறிமுகம காணுதல், திருகோணமலை மாவட்ட கடலோரப் பகுதிகளில் உப்புத் தன்மை, EC, pH, குளோரைட் மட்ட ஏற்ற இறக்கம் பற்றிய அளவுருக்களைக் கணித்தல், ஓரகத்தனிம நுட்ப முறையைப் பயன்படுத்தி கடல் நீர் நுழையும் பகுதிகளை அறிமுகம் கானல், ஆபத்தான பகுதிகள் மற்றும் கால நிலை மாற்றத்தினால் கடலோர மணல் நீர்பாறைகளுக்கு ஏற்படும் தாக்கங்களை மதிப்பீடு செய்யப்படவுள்ளமை, செயற்கை மீள் நிரப்புக்கான பகுதிகளை அடையாளம் காணுதல் ஆகியவை இச்செயற்றிட்டதின் எதிர்காலத் திட்டங்களாகும்.

2.1.4 அம்பாறை, குருநாகல், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, ,பதுளை மொனராகலை மற்றும் பொலன்னறுவை பிரதேசங்களில் நாள்பட்ட சிறு நீரக நோய் பரவிக்கிடக்கும் பகுதிகளில் நீரின் தரத்தை ஆய்வு செய்தல்

2017 ம் ஆண்டில் குருநாகலை, மொனராகலை, பதுளை மற்றும் பொலன்னருவ மாவட்டங்களில் நீர் புவியியல் ஆய்வு (எண்ணிக்கை 20), துளை துளைகள் நிர்மாணித்தல்(எண்ணிக்கை 20), நீர் மாதிரிப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு (எண்ணிக்கை 500) நீரின் தரத்திற்கான பகுப்பாய்வு(150) நீர் கிளினுக்குகள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டம் (எண்ணிக்கை 10), கைப் பம்புதல் குழாய்க் கிணறுகள் நிறுவல் செய்யப்பட்டன.

அடுத்து வரும் ஐந்து வருடக் காலப்பகுதியில் EC, நீரின் கடினத்தன்மை, குளோரைட், புளோரைட், pH, ஆகியவற்றிற்கான பகுப்பாய்வு மிக முக்கியமாகும்.

2.1.5 கிரிந்தி ஓயா வடிநிலை பிரதேசத்தில் நிலத்து நீர் மதிப்பீடு (ரூபா மில்லியன் 1.6)

இச் செயற்றிட்டத்தின் கீழ் நீர் புவியியல் ஆய்வு (எண்ணிக்கை 10), துளைதுளைகள் நிர்மாணித்தல் (எண்ணிக்கை 10), பம்புதல் பரிசோதனைகள் நடாத்தல் (எண்ணிக்கை 10), கண்காணிப்புக் கிணற்றுப் பகுதிகள் மட்டப் படுத்தல் (எண்ணிக்கை 35), நீர் வகைப்படுத்தல் மற்றும் கிணறு கண்காணிப்பு (எண்ணிக்கை - 200), நீரின் தரத்தின் பகுப்பாய்வு (எண்ணிக்கை- 100) 2017 ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன.

2.1.6 ஆழமான கிணறுகள், பம்புகள் நிர்மாணித்து நீர் வடிகட்டி நிறுவி அவசர தேவைகளின் போது பயன்படுத்த உலர் வளைய மாவட்டப் பிரதேசங்களில் உள்ள நிலத்து நீர் வளங்களை முன்னேற்றுதல் (ரூபா மில்லியன் 4.6)

2017 ஆண்டு ஜனவரி முதல் 2017 டிசெம்பர் வரையிலான காலப் பகுதியில் நீர் புவியியல் ஆய்வு (எண்ணிக்கை 15), துளை துளைவுகள் நிர்மாணித்தல் (எண்ணிக்கை 15), பம்புதல் பரிசோதனைகள் நடாத்துதல் (என்னிக்கை 15), மூழ்கிப் பம்ப்புகள் நிறுவுதல் (எண்ணிக்கை- 05), RO வடிகட்டிகள் நிறுவுதல் (எண்ணிக்கை 05) மொனராகலை, குருநாகலை, புத்தளம், கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் செய்து முடிக்கப்பட்டன.

2.1.7 உலர் வலயத்தில் உள்ள கைப் பம்பி குழாய் கிணறுகள் ஆகியவற்றைச் சீரமைத்தல் (ரூ. மில்லியன் 2.3)

பதுளை, மொனராகல மற்றும் ஹம்பாந்தேட்டை மாவட்டங்களின் கிராமீயப் பிரதேசங்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுத்தமான நீரினை பெற்றுக்கொடுக்க கைப் பம்பி குழாய் கிணறுகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் வேலைத் திட்டம் செய்து முடிக்கப்பட்டது. பழைய குழாய்க் கிணறுகளைச் சுத்தம் செய்தல், (எண்ணிக்கை -25) கை விசைக் குழாய்களைப் பழுதுபார்த்தல் (எண்ணிக்கை-50), கை விசைக் குழாய்கள் நிறுவதல் (எண்ணிக்கை-20) 2017 ஜனவரி முதல் 2017 டிசெம்பர் காலப்பகுதியில் செய்து முடிக்கப்பட்டது.

2.1.8 நிலத்து நீர் குறைவடைதல் மற்றும் மாசுபடுதல் ஊடாக உருவாகும் சூழல் பிரச்சினைகள் விடயமாக மத்திய சூழல் அதிகார சபை மற்றும் அரச நிறுவனங்களுடன் இணைந்து மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடுதல். (ரூ. மில்லியன் 0.5)

இச்செற்றிட்ட ஆய்வின் நேக்கமாவது மண், சரளை, கற்பாறை, களிமண் ஆகியவற்றின் அகழ்வு மற்றும் அளவுக்கதிகமாக நிலத்து நீரினை பிரித்தெடுத்தல் ஆகியவற்றினால் ஏற்படும் நீர் குறைபாடு மற்றும் சூழல் பிரச்சனைகளை அறிமுகம் கானுதலாகும். ஆய்வும், கண்காணிப்பும் மத்திய சூழல் அதிகார சபை மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து இவ்வாய்வு நடாத்தப்பட்டது. கொழும்பு, கம்பஹா, குருநாகல, புத்தளம், அனுராதபுரம், மொனராகல கேகாலை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் CEA, GSMB, NBRO மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து மொத்தமாக நூறு (100) தளங்கள் கண்காணிக்கப்பட்டன.

2.2 அமைச்சினால் நிதி வழங்கப்பட்ட நிலத்து நீர் அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பான பிரதேசக் காரியாலயம், தலைமைக் காரியாலயம் மற்றும் மொனறாகலைக் காரியாலயம் ஆகியவற்றினால் மூன்று (3) செயற்றிட்டங்கள் நடாத்தப்பட்டன.

2.2.1 **யாழ்ப்பான தீபகற்பத்திற்கான நிலத்து நீர் முகாமைத்துவத் திட்டம். (ரூ. மில்லியன் 3.6)**

இத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பான மாவட்ட செயலாளர், நீர்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் மேலதிகச் செயலாளர் -

மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய பங்குதாரர்களின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்திற்கான கிணறு விவரப் பட்டியல் ஒன்று தயாரிப்பதற்கு ஐந்து (05) விழிப்புணர்வுத் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டது. மேலும் ஆய்வுக்காக GPS (எண்ணிக்கை -80), EC (எண்ணிக்கை - 80) அளவு கருவிகள் கொள்வனவு செய்வதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2018 ம் ஆண்டிற்கான கிணறு விவரப் பப்பட்டியல் ஒன்றினைத் தயாரிப்பதற்காக கிணறுகளுக்கான தொழிநுட்ப விவரங்களைச் சேகரிக்க எதிர்பார்க்கப் பகின்றன.

2.2.2 **நீர்பாசன திட்டங்களுடன் தொடர்புபட்ட ஆழமற்ற நீர்ப்பாறைத் தொகுதிகளில் நிலத்து நீர் மற்றும் நீரின் தரத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்தல் (ரூ. மில்லியன் 1.0)**

தரவுகள் சேகரித்தல், நீர்ப் புவியியல் ஆராய்சிகளை மேற்கொள்ளல்(எண்ணிக்கை-25), கண்காணிப்பு துளை துளைகளை நிர்மாணித்தல் (எண்ணிக்கை- 25) நீர் மாதிரிகளை சேகரித்தல் மற்றும் நீரினை பகுப்பாய்வு செய்தல் (எண்ணிக்கை 13) யான் ஓயா நீர்தேக்கப் பகுதிகளில் 2017 ம் ஆண்டுக் காலப்பகுதியில் செய்து முடிக்கப்பட்டது.

2018 ம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்கள்

1. கண்காணிப்பு வலையமைப்பின் தரவுகள் வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு யான் ஓயா நீர்த்தேக்கப் பகுதியில் இருபது (20) பரிசோதனைத் துளை துளைகள் நிர்மாணித்தல்.
2. மல்வத்து ஓயா நீர்த்தேக்கப் பகுதியில் இருபத்து ஐந்து (25) பரிசோதனைத் துளை துளைகளை நிர்மாணித்தல்.

2.2.3 **உலர் வலயப் பிரதேசத்தில் நிலத்து நீரினை அபிவிருத்தி செய்தல் (ரூ. மில்லியன் 15)**

மேற்கூறிய செயற்றிட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் 2017 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

2.2.3.1 **கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் கேகாலை மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் பிரதேசங்கமற்றும் கிணறுகள் சுத்தம் செய்யும் வேலைத்திட்டம்(ரூ. மில்லியன் 20)**

இத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரியில் 490 கிணறுகளும், மாத்தறையில் 786 கிணறுகளும், களுத்துறையில் 548 கிணறுகளும் சுத்தம் செய்யப்பட்டது.

கிணறுகள் சுத்தம் செய்யும் திட்டதின்போது pH, EC மற்றும் நுண்ணுயிரியல் ஆகியவற்றிற்காக 780 நீர் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

2.2.3.2 வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஆழமான குழாய்க் கிணறுகள், தோண்டு கிணறுகள் நிர்மாணித்தல் மற்றும் நீர்ப் பம்புகள் நிறுவுதல்.

நீர்ப் புவியியல் ஆராய்ச்சி (எண்ணிக்கை - 35), ஆழமான குழாய்க் கிணறுகள் நிர்மாணித்தல் (எண்ணிக்கை- 30), மற்றும் பம்புகள் நிறுவுதல் 2017 ம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்டன.

அதற்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் நீர் விநியோகத் திட்டங்கள் இச் செயற்றிட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்டன.

1. தொராதுபிட்டிய -அதிமலெ ஆகிய இடத்தில சிறு அளவிலான நீர் விநியோகத் திட்டம்
2. மொனராகல மாவட்டத்தில் சிறிய அளவிலான நீர் விநியோகத் திட்டங்களை மறுசீரமைத்தல்.
3. மொனராகல மாவட்டத்தில் உள்ள பல்லேகம என்ற இடத்தில் குடி நீர் திட்டத்தை அபிவிருத்தி செய்தல்.

2.3 தெரிவு செய்யப்பட்ட 07 முன்னோடி பிரதேசங்களில் நிறுவப்பட்ட நிலத்து நீர் கண்காணிப்பு வலையமைப்புகளை விரிவுபடுத்தல் (DSWRP-AF)

அறிமுகம் காணப்பட்ட முன்னோடி பிரதேசங்களாவது யாழ்ப்பான அனுராதபுரம், புத்தளம், கம்பஹா மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பிரதேச செயலகப் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவு செய்யப்பட்டு நீரின் தரம் மற்றும் அளவு விடயமாக அறிக்கையிடப்பட்டது.



படம் 13 செயற்றிட்டத்தின் முன்னோடிப் பிரதேசதி கட்டம் I கட்டம் II மற்றும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொலன்னறுவை முன்னோடித் திட்டம்

3 பொது மக்களின், அரச நிறுவனங்களின் மற்றும் ஏனைய அமைப்புகளின் தேவையின் வேண்டுகோளுக்கிணங்க நிலத்து நீர் அபிவிருத்தி செயற்பாடுகளை நடாத்துதல்.

2017 ம் ஆண்டில் நடாத்தப்பட்ட விசேட செயற்றிட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது

அட்டவணை 15: செயற்றிட்டங்களின் விவரம்.

இல	செயற்றிட்டத்தின் பெயர்	நடைமுறைப் படுத்துவதின் பொறுப்பு
01	சுன்னாகப் பிரதேசத்தில் நிலத்து நீர் கலப்படைதல் விடயமான நீர்ப்புவியியல் ஆய்வு	கொழும்புத் தலைலைமைக் காரியாலயம்
02	யாழ்ப்பான நகர பிரதேசத்தில் குளங்களை மறுசீரமைப்புக்கான ஆலோசனைச் சேவைகள்.	கொழும்புத் தலைலைமைக் காரியாலயம்
03	மொரகஹகந்த மற்றும் களுகங்கை மீள் குடியேற்றப் பகுதிகளில் குழாய்க் கிணறுகள் நிர்மாணித்தல்	கொழும்புத் தலைலைமைக் காரியாலயம்
04	வட மாகானதில் கால நீடித்த IDP மீள் குடியேற்ற விடயமான தீர்வுக்கான பணிக்குழுவின் கீழ் மன்னார் மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் நிர்மாணித்தல் (சிறைச் சாலை சீர்திருத்தம் புனர்வாழ்வு மற்றும் இந்து மத விவகார அமைச்சு)	கொழும்புத் தலைலைமைக் காரியாலயம்
05	நீர் புவியியல் ஆய்வுகள் மற்றும் நீர் விநியோகத் திட்டங்களுக்குகிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நீர் விநியோகம் மற்றும் ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் உறபத்திக் குழாய்க் கிணறுகள் நிர்மாணித்தல் -WASSIP (நகர திட்டமிடல், மற்றும் நீர் விநியோக அமைச்சு)	கொழும்புத் தலைலைமைக் காரியாலயம்

அதற்கு மேலதிகமாக, பொது மக்கள், அரசு மற்றும் ஏனைய அமைப்புகளின் வேண்டுகோளுக்கிணங்க கீழ் குறிப்படப்படும் செயல்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டது..

வணிக நடவடிக்கைகள்

அரச மற்றும் ஏனைய அமைப்புக்களின் வேண்டுகோளுக்கிணங்க பொது மக்களின் தேவைகளையும் உள்ளடக்கி கீழ் குறிப்பிடப்படும் வணிக நடவடிக்கைகள் செய்யப்பட்டது. அதன் வளர்ச்சி கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 16: 2017 ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட செயற்பாடுகளின் விவரம்

இல	வகை	எண்ணிக்கை
1	நீர்ப் புவியியல் ஆய்வுகள்	659
2	குழாய்க் கிணறுகள் நிர்மாணித்தல்	166
3	கைப் பம்புககள் நிறுவுதல்	32
4	பம்புதல் பரிசோதனை	215
5	குழாய்க் கிணறுகளைச் சுத்தம் செய்தல்	36
6	நீர் மாதிரிகளின் இரசாயன பகுப்பாய்வு	756
7	இரும்பை அகற்றும் இயந்திரம் அமைத்தல்	34

கணக்காளர் நாயகத்தின் கணக்காய்வு வினவல்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கையினால் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கியல் மற்றும் முகாமைத்துவக் குறைபாடுகளை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை முறைகள்

1. கணக்கைவின்போது சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
2. நிரந்தர சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து அதன் பெறுமதி தேய்வு செய்யயப்பட்டது
3. வாகனங்களின் உரிமையைப் பெற்றுக்கொள்ள அல்லது மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன..
4. தேவையற்ற கையிருப்புக்கள் சரிபார்த்தல் குழுவினால் அறிமுகம் காணப்பட்டு அவற்றினை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
5. 2017 ம் ஆண்டிற்காக முகாமைதத்துவ சுற்று நிருபம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குரிய கொடுப்பனவு வழங்குவதை அதே வருட ஒக்டோபர் மாதம் முதல் அமுல் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டன.
6. ஆராய்ச்சி ஆய்வுகளின் குறைபாடுகளை படிப்படியாக நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

நீர்வளச் சபையின் செயற்பாடுகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

01. நாட்டின் நிலத்து நீரினை முகாமைத்துவம் செய்து நிலத்துடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஒரு பொறிமுறையினை உருவாக்க விதிமுறைகள் அறிமுகப்படுத்தல்.
02. நிலத்து நீர் சம்பந்தமான விடயங்களைக் கவனிக்க ஒரு அவசர செயல்பாட்டுப் பிரிவு ஒன்றை நீர்வளச் சபையில் நிறுவுதல்.
03. மென் பொருளைப் பயன் படுத்தி நிரந்தர சொத்துக்களை முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
04. தொழிநுட்ப ஊழியர்களை சேவையில் அமரத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (விசேடமாக நீர்புவியியல் விஞ்ஞானிகள், வேதியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப அதிகாரிகள்)
05. சபையின் நடவடிக்கைகளுக்காக பொருட்களும் உபகரணங்களும் பெற்றுக்கொள்ளல்
06. ஊழியர்களின் முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு பயிற்ச்சி வழங்குதல்..
07. சபையின் எல்லாப் பிரிவுகளினது வளர்ச்சியை வாராந்தம் மதிப்பீடு செய்தல்.
08. சபையினால் செய்யப்படும் செயற்பாடுகளை முன்தொடறுதல் .

2ඒ, හෙක්ටර් කොබ්බෑකඩුව මාවත, කොළඹ 07.

2A, ஹெக்டர் கொப்பேகடுவ அவென்யூ, கொழும்பு 07.

2A, Hector Kobbakaduwa Avenue, Colombo 07.